சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண். OS 96 of 2015

2019ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் மச்சக்காளை | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**குறுக்கு விசாரணை (3 முதல் 6 மற்றும் 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில்)**

12/03/2020

நான் குடியிருக்கும் மடப்புரத்திற்கும் தாவா சொத்திற்கும் இடையில் 18 கி.மீ. இருக்கும். நான் படிக்கவில்லை. வாதி சொத்து கேட்டு வழக்கு போட்டுள்ளார். வீரய்யா தேவர் மகன் செண்பகம் ஆகும். ராஜேந்திரன் என்பவர் என் மைத்துனார் ஆவார். என் அப்பா பெயர் கங்கானி. என் மைத்துனர் பிரதிவாதிகள் பங்காளிகள் மீது பி.சி.ஆர். வழக்கு போட்டுள்ளார் என்றால் ஆமாம். குற்ற எண்.6/2011 என்றால் அது பற்றி தெரியாது. வழக்கு சர்வே நம்பர் விஸ்தீரணம் பற்றி தெரியாது. வாதியின் வீடு நம்பர் தெரியுமா என்றால் வீடு தற்போது இல்லை. வீடு இடம் சேர்த்து 50 செண்ட் இருக்குமா என்றால் 2 3/4 ஏக்கர் இருக்கும். வாதி எத்தனை செண்டிற்கு வழக்கு போட்டுள்ளார் என்று தெரியாது. மேற்சொன்ன பி.சி.ஆர். வழக்கு காரணமாக எனக்கும் பிரதிவாதி வகையராவுக்கும் முன்விரோதம் இருப்பதால் பிரதிவாதிக்கு எதிராக நான் பொய்யாக சாட்சி சொல்லுகிறனே் என்றால் சரியல்ல. நான் மடப்புரத்தில் 15 வருடமாக குடியிருக்கிறேன். 3ம் வாதி லிங்கம் கரூரில் 30 வருடமாக குடியிருக்கிறார். தாவா சொத்தைப்பற்றி எனக்கு எந்த விவரம் தெரியும் என்றும், விரோத்தின் காரணமாக வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.